Aglasem Schools CBSE

**SET-4**

**Series SGN**

**Code No. 6**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **8** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப்பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **9** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கும் முன் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
- Please check that this question paper contains **8** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* | *மொ. மதிப்பெண்கள் : 100*

*Time allowed : 3 hours* | *Maximum Marks : 100*

## பகுதி அ *(50 மதிப்பெண்கள்)*

**1.** (அ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : *1×5=5*

(i) மெட்ரோ பனியால் வீடுகளில் விறிசல் ஏற்பட்டுள்ளது.

(ii) இளவச இருதய நோய் மற்றும் விளிப்புணர்வு முகாம்.

(iii) காளி மனைகள் விற்பணைக்கு உள்ளன.

(iv) வறுமானம் பெறுக சௌவை குறைக்க வேண்டும்.

(v) தங்க நானயங்கள் பறிசாக கிடைத்தன.

(vi) நாளும் இரண்டும் சொல்லுக்கு உருதி.

(vii) நல்ல நன்பர்கள் உரவை விட மேலானவர்கள்.

(ஆ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களை வல்லின மெய்யிட்டுத் திருத்துக : *1×5=5*

(i) பாவையர்க்கு பயந்து ஓடிட செய்யேன்.

(ii) தொடக்க காலத்தில் நாட்டு புறவியல் வளர்ச்சி அடைந்திருந்தது.

(iii) அந்த கண்ணாடியை எடுத்து இப்படி திருப்பு.

(iv) செய்யா தொழிலுக்குத் தண்டனை பெற்றேன்.

(v) பலவற்றை கேளுங்கள்; சிலவற்றை பேசுங்கள்.

(vi) இந்தத் தனி பேருந்து கல்லூரி சாலைக்குச் செல்லும்.

(vii) பங்கு சந்தைப் பற்றி தமிழ் கட்டுரை ஒன்று வரைக.

(இ) கீழ்வருவனவற்றுள் எவையேனும் **ஐந்து** தொடர்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக : *1×5=5*

(i) தன்னலம் கருதாது உதவுபவரைத் தெய்வம். என்று மக்கள் போற்றுகின்றனர்.
(செயப்பாட்டு வினைவாக்கியமாக மாற்றுக)

(ii) இனிப்புப் பதார்த்தங்களைக் குழந்தைகள் விரும்பி உண்பர்.
(பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக்குக)

(iii) தமிழரசி போட்டியில் கலந்துகொண்டு வெற்றிப் பெற்றாள். (தனி வாக்கியமாக மாற்றுக)

(iv) என் தாய் வயிராற உண்பித்தாள்.
(தன்வினை வாக்கியமாக மாற்றுக)

(v) இப்பாடல் என்னால் எழுதப்பட்டது.
(செய்வினை வாக்கியமாக மாற்றுக)

(vi) மறுநாள் தான் வெளியூர் செல்வதாகச் சங்கரன் தன் தந்தையிடம் கூறினான்.

(நேர்க்கூற்றாக மாற்றுக)

(vii) இளவரசி தினம் தோறும் தன் வீட்டு வேலைகளைச் செய்தாள்.

(பிறவினை வாக்கியமாக மாற்றுக)

**2.** (அ) பின்வரும் பத்தியைப் படித்து அதன் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க : *2×5=10*

"இந்த உலகில் ஒரு சதவீதம் நல்லதும் ஒரு சதவீதம் கெட்டதும் மீதி 98 சதவீதம் நடுநிலையிலும் உள்ளது" என்று ஒரு ஜெர்மானிய அறிஞர் சொன்னார். இதை நான் ஏற்கவில்லை. நேரம் இல்லாத இத்த உலகில் சுயநலமிக்கவர்கள் தாம் அதிகம். இச்சுயநலமிக்கவர்களாலேயே நாட்டில் வன்மையும் கொடுமையும் நடக்கின்றன. இதனாலேயே நாட்டுமக்களிடையே விரோத உணர்வும், கோப உணர்வும் மேலோங்கிக் காணப்படுகின்றன. விரோதத்தையும், கோபத்தையும் அடக்கிவைத்திருந்தாலும் ஆபத்து. வெளியே ஆத்திரம் தீரக் கத்தினாலும் ஆபத்து. விரோதத்தாலும் ஆத்திரத்தாலும் இரைச்சல் போடுகிறவர்களை நரம்புத் தளர்ச்சி உள்ளவர்கள் என்று ஒதுக்கி விடுவார்கள்.

"கோபம் கோழைத்தனம். அது மனம் பாதிப்பையும் பதைபதைப்பையும் காட்டும்" என்கிறார் தத்துவஞானி மார்க்கஸ் அரேலியஸ். நமக்குப் பிடிக்காத செயல்களையும், மனிதர்களையும் பற்றி நாம் கவலைப்படுதல் கூடாது. "தனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே கிடையாது" என்பார் ஜெனரல் ஐசன் ஹோவர். அமைதியைக் கெடுக்கும் கோபத்தையும் விரோதத்தையும் கைவிட்டு அமைதியாக வாழ்வோம்; ஆனந்தம் பெறுவோம்.

**வினாக்கள் :**

(i) நாட்டில் வன்மையும் கொடுமையும் நடக்க யார் காரணம் ? அவர்களால் மக்களிடையே எத்தகைய குணங்கள் மேலோங்குகின்றன ? *2*

(ii) தத்துவஞானி மார்க்கஸ் அரேலியஸ் கூறுவது யாது ? *2*

(iii) நரம்புத் தளர்ச்சி நோய் யாரைப் பாதிக்கும் ? *2*

(iv) ஜெனரல் ஐசன் ஹோவர் கூறுவது யாது ? *2*

(v) எப்பொழுது நாம் ஆனந்த வாழ்வு பெறலாம் ? *2*

(ஆ) எல்லையோரக் காவல்படை வீரர் ஒருவரை நேர்காணல் செய்க. *5*

**அல்லது**

பின்வரும் செய்யுளின் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க :

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சந்தி பிறக்குது மூச்சினிலே.
காவிரி தென் பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருணைநதி - என
மேவிய யாறு பலவோடத் - திரு
மேனி செழித்த தமிழ்நாடு.
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு. - நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் - மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு.

**வினாக்கள் :**

(i) எப்போது காதினில் தேன்வந்து பாயும் ? *1*

(ii) சக்தி பிறப்பது எப்பொழுது ? *1*

(iii) ஆசிரியர், 'மணியாரம்' என்று எதனைக் குறிப்பிடுகின்றார் ? *1*

(iv) தமிழ்நாடு வான்புகழ் பெறக் காரணமாய் இருப்பது எது ? *1*

(v) நதி - பொருள் தருக. *1*

**3.** கீழ்வரும் தலைப்புகளில் **ஒன்று** பற்றிக் கட்டுரை வரைக : *10*

(i) உலக வெப்பமயமாதல்

(ii) நாட்டு நலப்பணித்திட்டம்

(iii) கேடில் விழுச்செல்வம்

**4.** பின்வரும் தலைப்புகளில் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : *10*

(i) உமது இல்லத்திலுள்ள தொலைபேசியின் தொடர்பை ஒரு மூன்று மாதகாலத்திற்கு தற்காலிகமாக துண்டித்து வைக்குமாறுத் தொலைதொடர்பு அலுவலகத்தில் உள்ள இளநிலைப் பொறியாளர்க்குக் கடிதம் ஒன்று வரைக.

(ii) பள்ளி ஆண்டு விழாவின் போது நீவிர் நடிக்கும் நாடகத்தைக் காண வருமாறு நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக.

*(எக்கடிதமாயினும் உம்முகவரி த. தமிழரசன் / த. தமிழரசி, 48 திரு.வி.க. சாலை, புதுக்கோட்டை எனக் கொள்க.)*

Aglasem Schools CBSE

## பகுதி ஆ

*(50 மதிப்பெண்கள்)*

**5.** கீழ்வரும் வினாக்களில் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க : *10×2=20*

(i) கவிதையின் இயல்பாக மேனாட்டு அறிஞர்கள் கூறும் கருத்துகளையும் அவற்றிற்குப் பேராசிரியர் உரைக்கும் மறுப்புகளையும் கட்டுரை வடிவில் தருக.

(ii) இசைத்தமிழ் நாடகத்தமிழின் சிறப்பியல்புகளை எடுத்தெழுதுக.

(iii) பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனையும், ஈகைப்பண்பில் தமிழ்மக்கள் சிறந்து விளங்கிய தன்மையையும் விளக்குக.

(iv) நீதிநூல்களின் பொதுவான இயல்புக் குறித்தும், கவிதையின் நோக்கம் குறித்தும் ஆசிரியர் சிதம்பரனார் கூறுவன யாவை ?

**6.** கீழ்வரும் செய்யுளின் அடியிற்காணும் வினாக்களுக்கு விடையளிக்க : *5*

"உனை ஒன்று வேண்டுகின்றேன் என்னால் ஆவ

துண்டென்றால் அதற்கென்றன் உயிருண் டென்றான்"

(i) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? *2*

(ii) இவ்வாறு யார் யாரைப் பார்த்துக் கூறியது ? *2*

(iii) இவ்வடிகளைப் பாடிய ஆசிரியரின் இயற்பெ யர்யாது ? *1*

**அல்லது**

Aglasem Schools CBSE

"புல்லார் புரவிவல் விரைந்து பூட்டி

நெடுந்தேர் ஊர்மதி வலவ"

(i) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? இவ்வரிகளுக்குரிய ஆசிரியர் யார் ? *2*

(ii) இப்பாடலின் திணை துறைகளை விளக்குக. *2*

(iii) 'புல்லார் புரவி' - பொருள்தருக. *1*

**7.** கீழ்வரும் வினாக்களில் எவையேனும் **இரண்டனுக்கு** விடையளிக்க : *5×2=10*

(i) நரிவெரூஉத்தலையார் பயனில்லாத முதுமையுடையாரை விளித்துக் கூறுவனவற்றை எழுதுக.

(ii) 'வினைத்திட்பம்' – என்ற அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து வரைக.

(iii) கண்ணகியின் சூளுரையும் நகரமாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

(iv) சீதையை அனுமன் கண்டு வந்து கூறியச் செய்திகளை எழுதுக.

**8.** 'சட்டை' – என்ற சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக. *10*

**அல்லது**

'மூத்தப் பிள்ளை வீட்டு விருந்து' – என்ற கதையினைச் சுருக்கி வரைக.

**9.** 'மகன்' – என்ற சிறுகதையில் வரும் மல்லிகாவின் பண்பு நலன்களை எடுத்தெழுதுக. *5*

**அல்லது**

பால்வண்ணம் பிள்ளையின் பண்புகளை எடுத்தெழுதுக.